# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1641/41 - 2010 පෙබරවාරි 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.02.18

*1641/41 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் புனிதப்பகுதி அபிவிருத்தி அமைச்சராகிய தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன ஆகிய நான், இவ்வட்டவணை நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ளதும் அதன் நேரொத்த பகுதியின் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லைகளையும் வரையறைகளையும் கொண்டுள்ளதுமான இடப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமென அபிப்பிராயப்படுவதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன,*
*நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பகுதி அபிவிருத்தி அமைச்சர்.*

*"செத்சிறிபாய"*
*பத்தரமுல்லை,*
*2010, பெப்புருவரி 05.*

**அட்டவணை**

*மொறவக நகர அபிவிருத்திப்பகுதி*

*நிரல் I*

தென் மாகாண, மாத்தறை மாவட்ட, பிற்றாபத்தறை பிரதேச செயலாளர் பிரிவின், பிற்ராபத்தறை பிரதேச சபைப்பகுதியுள் அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவுகள் இல. 262 B றம்புக்கன கிழக்கு, இல. 262 E அலுவான, இல. 262 A வலிவ, இல. 262 C கொடிகாறகொடை மேற்கு ஆகியவற்றின் சகல காணிப்பகுதிகளும் நிரல் II இல் குறிப்பிட்டவாறு எல்லைகளாலும் வரையறைகளாலும் சூழப்பட்டுள்ளன.

*நிரல் II*

**வடக்கு** :

மொறவக்க- நெலுவ வீதியினது நடுக்கோடும் காறகொடை- றம்புக்கன வீதியின் நடுக்கோடும் சந்திக்கும் புள்ளியிலிருந்து தென்கிழக்கே, மொறவக்க நெலுவ வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது கொளுவந்தொள வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை ; பின்பு, வடகிழக்கே கொளுவந்தொள வீதியின் நடுக்கோட்டோரமாக வடக்கே கீறப்பட்ட கோடானது களுகலயாய வீதியின் (ஆராய்சிகேவத்தை கோவில் வீதி) நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, வடகிழக்கே நேராக கீறப்பட்ட கோடானது தபால் வத்தை வீதியும் மில்லாவ வீதியினது நடுக்கோடுகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, வடமேற்கே மில்லாவ வீதியில்

கீறப்பட்ட கோடானது 150 மீ. தூரத்தில் மொறவக்க கனிஷ்ட பாடசாலை மற்றும் விஜய வீடு ஆகிய காணியூடாக செல்லும் நீரோடையின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, மேற்குறிப்பிட்ட நீரோடையின் நடுக்கோட்டோரமாக வடகிழக்கேயும் தென்கிழக்கேயுமாகக் கீறப்பட்ட நடுக்கோட்டோரமாக வடகிழக்கேயும் தென்கிழக்கேயுமாகக் கீறப்பட்ட கோடானது மில்லாவ நீரோடையின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, தென்கிழக்கே மில்லாவ நீரோடையின் நடுக்கோட்டோரமாக வடக்கே கீறப்பட்ட கோடானது காலி- அக்குரஸ்ஸ- மாதம்ப வீதியிலுள்ள (மதகு இல. 62/3) இன் நடுக்கோட்டினை அடையும் வரை; பின்பு, வடகிழக்கே மேற்குறிப்பிட்ட வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது டி. எஸ். அபேகுணவர்த்தன மாவத்தையின் நடுக்கோட்டை அடையும் வரை.

**கிழக்கு :**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தென்கிழக்கே டி. எஸ். அபேகுணவர்த்தன மாவத்தையின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது அலுவான வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, தென்மேற்கேயும் தென் கிழக்கேயுமாக அலுவான வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது வெலிவா கோவில் வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, தென்மேற்கே மேற்குறிப்பிட்ட கோவில் வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது உடபலகாவத்தை பாலத்தின் நடுக்கோட்டினைச் சேரும் வரை; பின்பு, தென்மேற்கேயும் தென் கிழக்கேயும் நில்வல ஆற்றின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது 500 மீற்றர் தூரத்தில் ஒரு புள்ளியினை அடையும் வரை.

**தெற்கு :**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து மேற்கே நில்வல ஆற்றின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது றம்புக்கனை நீரோடையின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, வடமேற்கே றம்புக்கனை நீரோடையின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது காலி- அக்குறஸ்ஸ - மாதம்ப வீதியிலுள்ள மதகு இல. 59/2 இனது நடுக்கோட்டை அடையும் வரை.

**மேற்கு :**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து வடகிழக்கே காலி- அக்குறஸ்ஸ- மாதம்ப வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது றம்புக்கனை வீதியின் நடுக்கோட்டினைச் சந்திக்கும் வரை; பின்பு, வடமேற்கே றம்புக்கனை வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது கொடிகாறகொடை- றம்புக்கன வீதியின் நடுக்கோட்டினை அடையும் வரை; பின்பு, வடகிழக்கே மேற்குறிப்பிட்ட வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது தொடக்கப் புள்ளியினை அடையும் வரை.

3- 155/1

## 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் புனிதப்பகுதி அபிவிருத்தி அமைச்சராகிய தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன ஆகிய நான், இவ்வட்டவணை நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ளதும் அதன் நேரொத்த பகுதியின் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லைகளையும் வரையறைகளையும் கொண்டுள்ளதுமான இடப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமென அபிப்பிராயப்படுவதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன,*
*நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பகுதி அபிவிருத்தி அமைச்சர்.*

*"செத்சிறிபாய"*
*பத்தரமுல்லை,*
*2010, பெப்புருவரி 05.*

**அட்டவணை**

*பிற்றாபத்தறை நகர அபிவிருத்திப்பகுதி*

*நிரல் I*

தென் மாகாண, மாத்தறை மாவட்ட, பிற்றாபத்தறை பிரதேச செயலாளர் பிரிவின், பிற்றாபத்தறை பிரதேச சபைப்பகுதியுள் அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவுகள் இல. 261 A பிற்றாபத்தறை, இல. 265 A தங்கொளுவ, இல. 261D கந்துவான, இல. 261 கொறக்காவெல, இல. 265 தெஹிகஸ்ப ஆகியவற்றின் சகல காணிப்பகுதிகளும் நிரல் II இல் குறிப்பிட்டவாறு எல்லைகளாலும் வரையறைகளாலும் சூழப்பட்டுள்ளன.

*நிரல் II*

**வடக்கு :**

உடுகம - அக்குறஸ்ஸ வீதியிலுள்ள மதகு இல. 48/9 இன் நடுக்கோட்டினை செங்குத்தாக வடகிழக்கே கீறப்பட்ட கோடானது 300 மீற்றர் தூரத்தில் ஒரு புள்ளியினைச் சேரும் வரை; பின்பு, தென்கிழக்கே உடுகம - அக்குறஸ்ஸ வீதியின் நடுக்கோட்டுக்கு சமாந்தரமாகக் கீறப்பட்ட கோடானது, அக்குரஸ்ஸ- மாதம்ப வீதியின் நடுக்கோட்டிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் ஒரு புள்ளியினை அடையும் வரை; பின்பு, தென்கிழக்கே உடுகம- அக்குறஸ்ஸ வீதியின் நடுக்கோட்டுக்கு சமாந்தரமாகக் கீறப்பட்ட கோடானது அக்குரஸ்ஸ - மாதம்ப வீதியின் நடுக்கோட்டிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் ஒரு புள்ளியினை அடையும் வரை; பின்பு, வடகிழக்கே, வடக்கே மற்றும் வடகிழக்கே மேற்குறிப்பிட்ட வீதியின் நடுக்கோட்டுக்கு சமாந்தரமாகக் கீறப்பட்ட கோடானது நாத்தவில வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, தென்கிழக்கே மேற்குறிப்பிட்ட வீதியின் நடுக்கோட்டோரமாக வடக்கே கீறப்பட்ட கோடானது அக்குரஸ்ஸ - மாதம்ப வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, வடகிழக்கே மேற்குறிப்பிட்ட வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது கொறக்கவெல வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை.

**கிழக்கு :**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தென்கிழக்கே கொறக்காவெல வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது கொறக்காவெல கங்காரி விஹாரை ஆதனத்தின் வடக்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, வடகிழக்கே கொறக்காவெல கங்காரி விஹாரை ஆதனத்தின் வடக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது நில்வல ஆற்றின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது பறவிற்ற நீரோடையின் நடுக்கோட்டினைச் சேரும் வரை; பின்பு, வடகிழக்கேயும் தென்கிழக்கேயுமாக பறவிற்ற நீரோடையின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது அலதெனியா வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை ; பின்பு, தென்மேற்கே அலதெனியா

வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது சியம்பலகொடை- அக்குரஸ்ஸ வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை பின்பு, தென்கிழக்கே மேற்குறிப்பிட்ட வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது கொட்டகலை வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, தென்கிழக்கே கொட்டகலை வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது மீகஹாகந்தை வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை ; பின்பு, தென்மேற்கேயும் மேற்கேயுமாக மேற்குறிப்பிட்ட வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது மாற/தெஹிகஸ்பே டட்லி சேனாநாயக மஹா வித்தியாலயத்தின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, தென்மேற்கேயும் தென் கிழக்கேயுமாக மேற்குறிப்பிட்ட ஆனத்தின் கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது றத்தம் பிலியாகொடை காணியினது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, தெற்கே மேற்குறிப்பிட்ட ஆதனத்தின் கிழக்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, தெற்கே மேற்குறிப்பிட்ட ஆனத்தின் கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது அதே ஆதனத்தின் தெற்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு, மேற்கு மேற்குறிப்பிட்ட ஆதனத்தின் தெற்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது சியம்பலாகொடை அங்குரஸ்ஸ வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, மேற்கே ஆதாரதெனியா வத்தையின் தெற்கு எல்லையோரமாக ஓடும் கால்வாயின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது நில்வள ஆற்றின் நடுக்கோட்டை அடையும் வரை ; பின்பு, தென்மேற்கே நில்வள ஆற்றின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது தன்னபிட்ட நில்வள ஆற்று பொது வீதியின் நடுக்கோட்டினைச் சேரும் வரை.

**தெற்கு :**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தென்மேற்கே தன்னபிட்ட நில்வள ஆற்று பொது வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது தன்னபிட்ட கதுறுவன வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை பின்பு, வடமேற்கே மேற்குறிப்பிட்ட வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது காலி- அக்குரஸ்ஸ- மாதம்ப வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை.

**மேற்கு :**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து வடகிழக்கே தென்கிழக்கே மற்றும் வடகிழக்கே காலி- அக்குரஸ்ஸ- மாதம்ப வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது மல்புதனல்ல சந்தியினை சேரும் வரை ; பின்பு, வடமேற்கே உடகம- அக்குறஸ்ஸ வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது தொடக்கப் புள்ளியினை அடையும் வரை.

*3- 155/2*